வ.உ.சி.யின் உயில்

செ. திவான்

வ.உ.சி.யின் உயில்

வரலாற்றாசிரியர்
செ.திவான், எம்.ஏ, எம்.ஃபில்.,

சுஹைனா பதிப்பகம்,
106 F-4A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை.
✆ : 0462 - 2572665.

ஆசிரியரின் 52-வது நூல்

முதற்பதிப்பு : மார்ச் 1, 2003 விலை ரூ. பத்து

அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

அட்டையில் : வ.உ.சி. வாழ்க்கைத் துணைவியார் மீனாட்சி அம்மையாருடன்

காணிக்கை

ஈரோட்டுப் பகலவன் தந்தை பெரியார் **ஈ.வெ.ரா.** தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்களும், நெல்லை மாநகர் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர் சகோதரர் வழக்கறிஞர் திரு. **மு.சுப்புரத்னம்** பி.எஸ்.ஸி. பி.எல். அவர்களின் தாய்-தந்தையருமான



நாங்குநேரி

செ. முத்துக்கிருஷ்ணன் - மு.பாப்பம்மாளுக்கு...

- சுஹைனா பதிப்பகம்

வீரத்தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள்

உலகெலாம் வாழும் தமிழர்கள் நினைத்து நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தரணியில் தனக்கெனத் தனிச் சிறப்புப் பெற்ற உத்தமத் தலைவர் வ.உ.சி.யின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் ....

பிறப்பு

இன்றைய தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் 1872 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் நாள் வியாழக்கிழமையன்று, உலகநாதப் பிள்ளைக்கும் - பரமாயி அம்மையாருக்கும் மகனாகத் தோன்றினார் வ.உ.சி. இவருக்கு உடன்பிறந்தோர் எழுவர்; தந்தை உலகநாதப் பிள்ளையின் தமையன் சிதம்பரம் என்பவரின் நினைவாக சிதம்பரம் என்ற பெயர் சூட்டப்பட்டது.

கல்வி

வீரப் பெருமாள் அண்ணாவியிடம் தொடக்கக் கல்வியையும், கிருட்டினன் என்பவரிடம் ஆங்கிலமும், ஒட்டப்பிடாரத்தில் நடுத்தரக் கல்வியையும், திருநெல்வேலி ம.தி.தா.உயர்நிலைப் பள்ளியிலும், தூத்துக்குடியில் உயர்நிலைக் கல்வியும் பெற்று திருச்சிராப்பள்ளியில் சட்டக் கல்வியும் பயின்று தேறினார். கஸ்தூரி ஐயங்கார், அண்ணாத்துரை ஐயர், சவரிராயப்பிள்ளை ஆகியோரிடமும் ஆங்கில-தமிழ் மொழியையும் சிறப்பாகக் கற்றறிந்தார்.

திருமணம்

ஒட்டப்பிடாரத்தில் வட்டார அலுவலகத்தில் எழுத்தராக பணியினைத் துவங்கிய வ.உ.சி. 1895-இல் தூத்துக்குடியில் வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கலானார். 1895-இல் திருச்செந்தூர் சுப்பிரமணியம் பிள்ளையின் மகள் வள்ளியம்மையை மணந்தார்; கி.பி.1901 ஆம் ஆண்டில் அவர் மறைந்ததும், மீனாட்சி என்னும் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

கப்பலோட்டிய தமிழன்

1905 முதல் 1908 வரை நான்கு ஆண்டுகள் வ.உ.சி.யின் அரசியல் வாழ்வில் துடிப்புள்ள ஆண்டுகளாகும். 1906 அக்டோபர் 16-இல் தூத்துக்குடியில் 'சுதேசிக் கப்பல் கம்பெனி'யைத் துவங்கினார். 1907-இல் சூரத் காங்கிரசிலும் 1908-இல் 'தேசாபிமான சங்கம்' நெல்லையில் அமையவும் வ.உ.சி. ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கது.

சுப்பிரமணிய சிவா

1908 பிப்ரவரி 3 முதல் மார்ச் 9 வரை வீர முரசு சுப்பிரமணிய சிவாவுடன் இணைந்து வ.உ.சி ஆற்றிய தொடர் சொற்பொழிவுகள் தமிழக அரசியலில் விடுதலைத் தீயை வளர்த்தது. ஆத்திரங்கொண்ட ஆங்கிலேய அரசினரால் 1908 மார்ச் 12-இல் கைது செய்யப்பட்டார். 1908 ஜூலை 7-இல் வெள்ளையர் அரசு வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனையை வழங்கியது.

செக்கிழுத்த செம்மல்

கோவைச் சிறையிலும், கண்ணனூர் சிறையிலும் வாடிய வ.உ.சி. 4 வருடம் 11 மாதங்கள், 12 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின் 24-12-1912-இல் விடுதலையானார்.

சென்னை-கோவை-கோயிற்பட்டி வாழ்க்கை

சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் அருணாச்சல நாயகன் வீதியிலும், திருமயிலையிலும், பிரம்பூரிலும் வாழ்ந்த வ.உ.சி. (1912-1919) குடும்பத்தை நடத்தும் பொருட்டு அரிசி வியாபாரமும், நெய் வியாபாரமும் செய்தார்.

சென்னையில் தொடர்ந்து வாழ முடியாமல் நண்பர்களின் வேண்டுகோளை ஏற்று கோவையில் வாழத் துவங்கினார். (1919-1922) அப்போது அரசியலிலிருந்து முழுமையாக விலகினார். காங்கிரசில் மிதவாதிகளின் செல்வாக்கினால் தீவிரவாதியான வ.உ.சி. காங்கிரசு இயக்கத்திலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்டார்.

1922-இல் கோயிற்பட்டியில் குடியேறி வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்த வ.உ.சி., 1927-இல் அரசியலில் திரும்பவும் தம்மை உட்படுத்திக் கொண்டு, சேலத்தில் நிகழ்ந்த மாநாட்டில் தலைமையேற்றுச் சிறப்பித்தார். தந்தை ஈ.வெ.ரா. பெரியார் அவர்களுடன் நட்பை வளர்த்துக் கொண்டார்.

இறுதி

1932-இல் ஆட்சித் துணைத் தலைவரின் தலைமையிடம் கோயிற்பட்டியிலிருந்து தூத்துக்குடிக்கு மாற்றப்பட்டதால் வ.உ.சி.யும் தூத்துக்குடியில் குடியேறினார்; அங்கு உடல் நலிவிற்கிடையில் வழக்குரைஞர் தொழிலை நடத்தி வந்தார். 1936 நவம்பர் 18 இரவு 11.30 மணியளவில் பூதவுடல் நீந்துப் புகழுடம்பு எய்தினார்.

எண்ண அலைகள்

அரசியல் உலகில் அஞ்சா நெஞ்சர் வ.உ.சி. ஆற்றிய அரும்பணிகளை அறிந்த அளவிற்கு அவரது இலக்கியத் தொண்டினை அகிலம் முழுமையாக இதுவரை அறியவே இல்லை எனலாம்.

தமிழ் இலக்கிய இலக்கணப் புலமை பெற்ற வ.உ.சி. படைப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், மொழி பெயர்ப்பாசிரியராகவும் பணியாற்றித் தமிழ் மொழிக்குப் பெருந்தொண்டாற்றியிருக்கிறார். வ.உ.சி. சிறந்த கவிஞர். பார் அதிரக் கவி பாடிய பாரதியாரைப் போல தேசியப் பாடல்களைப் புனைந்திட வ.உ.சி. நாட்டம் கொள்ளவில்லை. பண்டையத் தமிழ் மரபுக் கவிஞராகவே வ.உ.சி. விளங்கினார்.

அகிலம் போற்றும் அரசியல் தலைவராகவும், அறிஞர் பெருமகனாராகவும், விடுதலைப் போராட்ட வீரராகவும், புகழ் வாய்ந்த புனிதராகவும் வாழ்ந்திட்ட திருவிளக்கு, தென் தமிழகம் தந்த தவப்புதல்வர் வ.உ.சி.

அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து வலிமை வாய்ந்த குரலை எழுப்பிய வ.உ.சி.யின் மங்காப் புகழ் அழியாது நிலை நிற்க வேண்டுமென்ற ஆவலிலும், காலகதியில் வ.உ.சி.யின் நூற்கள் மறைந்துவிடக் கூடாதென்ற ஆதங்கத்திலும் வ.உ.சி.யின் அச்சில் வராத 'அழகும் ஆரோக்கியமும்' என்ற கட்டுரைகளைத் தேடி எடுத்துப் பதிப்பித்தேன். அது போன்றே 'துன்பத்தின் கற்பனை' என்ற கட்டுரைத் தொகுப்பையும் வெளியிட்டேன்.

1927-இல் சேலம் ஜில்லாவில் நடைபெற்ற மூன்றாவது அரசியல் மகாநாட்டில், செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. ஆற்றிய உரையினை 'சேலம் அரசியல் மாநாட்டில் எனது பெருஞ்சொல்' என்று எட்டணா விலையில் வ.உ.சி. வெளியிட்ட நூலை 'வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்' எனும் நூலாக மறுபதிப்புச் செய்தேன்.

ஈரோட்டுப் பகலவன், சுயமரியாதை இயக்கப் பிதா, தந்தை ஈ.வெ.ரா. அவர்களுக்கும், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி.க்கும் இடையில் நிலவிய நட்பை, உறவை விவரித்திடும் வண்ணம் 'வ.உ.சி.யும் பெரியாரும்' எனும் நூலாக எழுதி வெளியிட்டேன்.

தேசீயத்தின் மூச்சுக் காற்றாய், வெள்ளை இருட்டை விரட்டத் தோன்றிய சுதந்திர வீரர்களின் தாரக மந்திரமாய்த் திகழ்ந்த வ.உ.சி. அவர்கள் வாழ்ந்த காலத்திலேயே அவர்களது புகழினைப் பாடிய முன்னோடிகளின்

பாடல்களை 'வ.உ.சி. புகழ் பாடிய முன்னோடிகள்' எனும் நூலாகத் தொகுத்து வெளியிட்டேன்.

வ.உ.சி.யின் வாழ்க்கைச் சரிதத்தை 1940-களிலேயே தந்த பெருமைக்குரியவர் பரலி சு. நெல்லையப்பர். அறுபது ஆண்டுகளுக்கு முன் அவர் தந்த 'வ.உ.சிதம்பரம் பிள்ளை சரித்திரம்' எனும் நூலினையும், பரலி சு. நெல்லையப்பரின் சரித்திரத்தை அடியேன் எழுதியும் அதனை, 'வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்' எனும் நூலாக வெளியிட்டேன்.

வ.உ.சி.யின் 'பாடற்றிரட்டு' நூலினை மறுபதிப்புச் செய்து வெளியிட வேண்டுமென்ற அவாவில் இருந்த எனது எண்ணத்தினை செயல் வடிவமாக்கியவர் நெல்லை வ.உ.சி. இலக்கியப் பேரவையின் நிறுவனர் அண்ணன் திரு.இல.இராமகிருஷ்ணன். புரபசனல் கூரியர் உரிமையாளர் திரு.எஸ். மேகலிங்கம் ஆகியோர் காட்டிய உற்சாகத்தால் வ.உ.சி.யின் 'பாடற்றிரட்டு' நூல் ஏறத்தாழ 85 ஆண்டுகளுக்குப் பின் தமிழகத்தில் மீண்டும் உலா வந்தது.

1946-இல் வ.உ.சி.யின் புதல்வர் வ.உ.சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட்ட 'வி.ஓ.சி.கண்ட பாரதி' எனும் வ.உ.சி.யின் நூலினை வ.உ.சி. பிறந்த தின வெளியீடாக புதுக்கோட்டை சகோதரர் திரு P.செல்வம் அவர்களின் உதவியுடன் வெளியிட்டேன்.

வ.உ.சி.யின் முதல் மனைவியான திருமதி வள்ளியம்மை அவர்களின் சரித்திரத்தினை (1915-இல் முதற்பதிப்பு) மீண்டும் வ.உ.சி. நினைவு தின வெளியீடாக 18-11-2000இல் வ.உ.சி. யின் வள்ளியம்மை சரித்திரம் எனும் நூலாக வெளியிட்டேன்.

சென்னை சூடாமணி பதிப்பகம் திரு. அருணகிரி எனது வ.உ.சி. நூற்கள் நான்கினைத் தொகுத்து 'வ.உ.சி.நூற்கோவை' எனும் தனி நூலாக வெளியிட்டார்.தூத்துக்குடி சைவநெறி P. காந்தி அவர்களின் உதவியுடன் 'ஜனவரி 26, 2001-இல் வ.உ.சி.க்கும் தொல்காப்பியத்திற்கும் இருந்த தொடர்புகளை விளக்கி 'வ.உ.சி.யும் தொல்காப்பியமும்' என்ற நூலை வெளியிட்டேன்.

வ.உ.சி.க்கும் திருக்குறளுக்கும் இடையே இருந்த தொடர்பினை விளக்கி, 'வ.உ.சியும் திருக்குறளும்' எனும் நூலை வெளியிட்டேன்.வ.உ.சி. தனது வாழ்நாளில் இருமுறை வெளியிட்ட (1917-1930) 'பதினெண்கீழ்க்கணக்கு' நூல்களில் ஒன்றான 'இன்னிலை' விருத்தியுரையினை கண்ணியத்திற்குரிய **Rm.K.V.** விஸ்வநாதன் அவர்களின் உதவியுடன் வெளியிட்டேன்.

தேசத்திற்காகவே தன்னை அர்ப்பணித்து மறைந்த செம்மல் வ.உ.சி.யின் இறுதிக் காலத்தில் அவர் எழுதிய உயிலை அண்மையில் அவரது புதல்வர் போற்றுதலுக்குரிய பண்பாளர் ஐயா வ.உ.சி. வாலேஸ்வரன் அவர்கள் எனக்குத் தந்தார்கள். அதனைப்படித்தபோது, அன்று இரவு முழுவதும் அடியேன் தூங்கிடவில்லை. வ.உ.சியின் சோக வரலாற்றினை, தியாக சரித்திரத்தை, உலகம் உணர்ந்து கொள்ளவேண்டும் என்று நினைத்தேன். பகட்டும், படாடோபமும் நிறைந்த இன்றைய அரசியல் உலகில் தூய அப்பழுக்கற்ற கண்ணிய வாழ்வை நடத்தி கடைசியில் கடனிலும், கண்ணீரிலும் மறைந்த அந்தப் புனிதத் தலைவரின் வாழ்க்கையின் இறுதிப்பக்கங்களை வாசிக்கிறபோது வரலாற்று உண்மைகள் எவ்வளவு வியப்பானவை! நாட்டுக்கு உழைத்திடும் நல்லவர்களை எதிர்காலத்தில் சமுதாயம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடக்கூடாதே என்ற ஆதங்கத்தில் வ.உ.சி.யின் உயிலினை முதல் முறையாக சிறு நூலாக வெளியிடுகிறேன். தமிழ்ச் சமுதாயத்தில் இந்த உயிலை வாசித்தபின் நல்லவர்களைப் போற்றிட, ஆதரித்திட முன்வருபவர்களின் எண்ணிக்கை துளி அளவு அதிகரித்தாலும் அதுவே இந்தச் சிறிய நூலுக்குக் கிடைத்திட்ட சன்மானமாகும். இந்நூல் வெளிவர உதவிய திரு. மு. சுப்புரத்னம் பி.எஸ்ஸி.பி.எல்., (நெல்லை மாநகர் மாவட்ட ம.தி.மு.க.செயலாளர்) மாநகர் மாவட்டக் கழக அவைத் தலைவர் பாசமிகு அண்ணன் ஐ. சாமுவேல், டி.வி. தங்கசாமி ஆகியோருக்கும், இறைவனுக்கும், காலத்திற்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

01-03-2003 **செ.திவான்**

செ.திவான் எழுதிய, தொகுத்த வ.உ.சி. நூல்கள்

1. வ.உ.சி.யின் அழகும் ஆரோக்கியமும்.
2. வ.உ.சி.யின் துன்பத்தின் கற்பனை
3. வ.உ.சி.யின் அரசியல் பெருஞ்சொல்
4. வ.உ.சி.யின் புகழ் பாடிய முன்னோடிகள்
5. வ.உ.சி.யும் பெரியாரும்
6. வ.உ.சி. பாடல்கள்
7. வ.உ.சி.யும் பரலி சு. நெல்லையப்பரும்
8. வ.உ.சி.யின் வி.ஓ.சி. கண்ட பாரதி
9. வ.உ.சி.நூற் கோவை
10. வ.உ.சி.யின் வள்ளியம்மை சரித்திரம்
11. வ.உ.சி.யும் தொல்காப்பியமும்
12. வ.உ.சி.யும் திருக்குறளும்
13. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி. (இன்னிலை-வ.உ.சி.விருத்தியுரையுடன்)
14. வ.உ.சி.யின் உயில்

வ.உ.சி.யின் உயிலை வாசிப்பதற்கு முன்.....

அகவற்பாவால் தனது சுயசரிதையை வ.உ.சி. தாமே எழுதியுள்ளார். சுதந்திரவேள்வியில் தன்னை அர்ப்பணித்து, வெள்ளையரை எதிர்த்து கப்பலோட்டி, ஆங்கிலேயர்களால் வழக்கு தொடரப்பட்டு, சிறை சென்று விடுதலையான வரையிலான வரலாறு அது. அதன்பின் வ.உ.சி.யின் வரலாறு பலராலும் எழுதப்பட்டுள்ளது. ஆனால் அதில் வ.உ.சி.யின் குடும்பம் - மனைவி - மக்கள் பற்றிய செய்திகள் விரிவாக இல்லை. வ.உ.சி.யின் உயிலை வாசிப்பதற்குமுன் அவரது குடும்பம் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

உலகநாதபிள்ளை

சிதம்பரக் கவிஞனின் மகனார் வள்ளியப்பன். அவரது துணைவியார் மீனாட்சியம்மை. இத்தம்பதியருக்கு ஐந்து பிள்ளைகள். சிதம்பரம், உலகநாதன், குமாரசாமி, மற்ற இருவர் பெண் குழந்தைகள்.

சிதம்பரம் 28 வயதில் மறைந்து விட்டார். குமாரசாமியும் மறைந்து விட்டார். இந்தநிலையில் உலகநாதன் வளர்ந்து பெரியவராகி, பரமாயி அம்மையாரை மணந்தார். தனது தமையன் **சிதம்பரம்** நினைவாக தன் பிள்ளைக்கு சிதம்பரம் என்று பெயரிட்டார். 1872 செப்டம்பர் 5-இல் ஓட்டப்பிடாரத்தில் பிறந்த வ.உ.சிக்கு, சிதம்பரம் என்ற பெயர் இவ்வாறு வந்தது.

வ.உ.சி.யோடு பிறந்தவர்கள்

வ.உ.சி.யோடு உடன்பிறந்தவர்கள் ஏழு பேர் ஆவர்.

1) வள்ளியம்மை என்ற சகோதரியும், 2) இன்னொரு தங்கையும் இளமையிலேயே மறைந்தனர். 3) இன்னொரு சகோதரர் வ.உ.சியோடு பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போதே மறைந்தார். 4) மாலையம்மை என்ற சகோதரி உண்டு; அவரது கணவர் சோமசுந்தரம்பிள்ளை.

5) 'எவனுக்கும் இளையான், ஈடில் குணத்தான்' மீனாட்சி சுந்தரம், 6)கடைசியிற் பிறந்த கலியாண சுந்தரம் ஆகிய ஆறு பேரோடும், வ.உ.சி.யையும் சேர்த்து சகோதர-சகோதரிகள் மொத்தம் ஏழு பேர் ஆவர்.

வ.உ.சி.யின் திருமணம்

கி.பி. 1895-இல் திருச்செந்தூர் சுப்பிரமணியம் பிள்ளையின் மகள் வள்ளியம்மையை வ.உ.சி. மணந்தார். கி.பி. 1901-ஆம் ஆண்டில் பிரசவத்திற்காகச் சென்ற போது வள்ளியம்மையார் மறைந்தார். இதனால் வ.உ.சி.பெரிதும் துயருற்றார். தமது மைத்துனர் முத்துசாமிப்பிள்ளையின்

பெயரால் அந்த அம்மையாரின் வரலாற்றை 'வள்ளியம்மை சரித்திரம்' என்னும் நூலாக 1915-இல் வ.உ.சி. வெளியிட்டார். (அதனை கி.பி. 2000-இல் மறுபதிப்புச் செய்யும் பாக்கியத்தினை இறைவன் எனக்கு வழங்கினான்)

சிறுபாட்டன் புத்திரி

வள்ளியம்மையாரின் சிறுபாட்டன் புத்திரியான மீனாட்சியம்மையாரை வ.உ.சி. 8-9-1901-இல் திருமணம் செய்து கொண்டார். ஆழ்வார் திருநகரிமாசி வீதி சி.வ.பாப்பு பிள்ளை என்ற ஞானதேசிகம் பிள்ளையின் புதல்வி இவர்.கி.பி. 1908-இல் நாட்டு விடுதலைக்காக வ.உ.சி. சிறை செல்வதற்கு முன்னர் இரண்டு பிள்ளைகள் வ.உ.சி. மீனாட்சியம்மை தம்பதியருக்குப் பிறந்தன. சிறை சென்று திரும்பியதும் ஆறு பிள்ளைகள் பிறந்தன. மொத்தம் எட்டுப் பிள்ளைகளில் நால்வர் ஆண்கள்; நால்வர் பெண்கள்.

வ.உ.சி உலகநாதன்

வ.உ.சியின் தலைமகன் இவர். சைவ வேளாளர் மரபுப்படி தனது தந்தையார் பெயரை இவருக்குச் சூட்டினார் வ.உ.சி. சென்னை பெரம்பூர் கலவல ராமானுஜம் செட்டி உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். 1919இல் அண்ணல் காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்க அறிவிப்பினை ஏற்று இந்தப்பிள்ளையை பள்ளிக்கு வ.உ.சி. அனுப்பவில்லை. 1920இல் கோயம்புத்தூர் லண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளியிலும், 1922இல் தூத்துக்குடி சரஸ்வதி ஆங்கிலோ வெர்ணாக்குலர் ஹைஸ்கூலில் (எஸ்.ஏ.வி. உயர்நிலைப்பள்ளி) உலகநாதன் படித்தார்.

சிறு வயதில் மிகவும் திறமையோடும், சொல்லாற்றல் மிக்கவராகவும் திகழ்ந்த இவர் தனது 16 வயதுகளிலே, திலகர் பல்பொடி, திலகர் சவுக்காரம் (சோப்) போன்ற பொருட்களைத் தாமே செய்து விற்கும் ஆற்றலைப் பெற்றிருந்தார் உலகநாதன். இவருக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணிய போது, வ.உ.சி வாழ்ந்திருந்த காலத்திலேயே நச்சுக் காய்ச்சலில் 1923 டிசம்பர் 19இல் மறைந்தார்.

வ.உ.சி. ஆறுமுகம்

தூத்துக்குடியில் வாழ்ந்த வணிகப் பெருமகன், வ.உ.சியின் உற்ற நண்பர் சி.த. ஆறுமுகம் பிள்ளை. (தனது சுய சரிதையில் இவரைப் பற்றி வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார்). வ.உ.சி. தனக்குப் பிறந்த இரண்டாவது ஆண் குழந்தைக்கு (1905) தனது நண்பர் ஆறுமுகத்தின் பெயரைச் சூட்டினார்.

தமிழ்நாடு அரசாங்கத்தில் கூட்டுறவு இலாகாவிலும், பின்னர் நாட்டுப்புறச் சீரமைப்பிலும், தொடர்ந்து தொழிலாளர் நலத்துறையிலும்

அதிகாரியாய் 30 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். விளாத்தி குளம் அருகே சின்னூரில் வாழ்ந்து வந்தவர். சின்னூர் கிராம கணக்குப்பிள்ளை சண்முகசுந்தம்பிள்ளையின் ஒரே மகள் செல்லம்மாளை 23-6-1925இல் மணந்தார். இவருக்கு நான்கு ஆண்மக்கள்; நான்கு பெண்மக்கள். ஆண்மக்களில் மூத்தவரான சண்முகசுந்தரம் 'நவசக்தி' இதழில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். மீனாட்சி சுந்தரம் (வ.உ.சி.யின் தமையனார் பெயர்) இளங்கோவன் என்ற பெயரில் 'இளவேனில் இரவுகள்' என்னும் கவிதை நூலை வெளியிட்டுள்ளார்; 'நவஇந்தியா', 'தமிழ்நாடு' இதழ்களிலும் பணியாற்றியுள்ளார். மூன்றாவது மகன் சங்கரலிங்கம், நான்காவது மகன் உலகநாதன்; பெண்மக்கள் சிதம்பரவடிவு; கமலா; செண்பகவல்லி; சீதாலெஷ்மி ஆகியோர் ஆவர்.

வ.உ.சி. ஆறுமுகம் அரசியலில் ஈடுபட்டார். 1967-இல் தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் கோவில்பட்டி சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பை இழந்தார். (எஸ். அழகிரிசாமி (இந்தியக் கம்யூனிஸ்ட்) 33311 வாக்குகள்; வ.உ.சி. ஆறுமுகம் பிள்ளை (காங்கிரஸ்) 22885 வாக்குகள்) பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையார், தூத்துக்குடிக்கு வ.உ.சி. சிலை திறப்பு விழாவின் போது, 5-9-1972இல் வருகை புரிந்தார்; வ.உ.சியின் நினைவுத் தபால் தலைகள் தொகுப்பை வெளியிட்டார்; அதனை வ.உ.சி. ஆறுமுகமே பெற்றுக் கொண்டார். அதன் பின்னர் சிறிது காலத்தில் அவர் மறைந்தார்.(வ.உ.சி. தனது உயிலின் துவக்கத்தில் குறிப்பிடும் மூத்த மகன் ஆறுமுகம் பிள்ளை இவர்தான்)

வ.உ.சி. ஞானாம்பிகை என்ற ஞானவல்லி

வ.உ.சி சிறையிலிருந்து விடுதலையானதற்குப்பின், சென்னை வாழ்க்கையைத் தொடர்ந்து, கோவையில் வாழத் துவங்கினார் (1919-1922).

கோவை மாவட்டத்தில் பேரூர்த்தலத்தில் வாழ்ந்திருந்தபோது, அங்கிருந்த ஞானம்பாள் திருக்கோயிலைப் புதுப்பித்து, விழா எடுத்த ஆண்டில் வ.உ.சி.க்குப் பெண் குழந்தை பிறந்தது. அதனால் தனது மூத்த மகளான இவருக்குத் தனது மாமனார் ஞானதேசிகம் பிள்ளை நினைவாகவும், பேரூர் ஞானம்பாள் திருக்கோயிலின் நினைவாகவும் ஞானாம்பிகை என்று பெயரிட்டார் வ.உ.சி. இவருக்குத் திருமணம் வ.உ.சி. வாழ்ந்திருந்த காலத்திலேயே நடைபெற்றது. தமிழக அரசின் கூட்டுறவுத் துறை அதிகாரியான ச. திருஞானசம்பந்த மூர்த்தியா பிள்ளையின் வாழ்க்கைத்

துணைவியான ஞானாம்பாள் என்ற ஞானவல்லி, சங்கரநாராயணன் என்ற மகனையும், மீனாட்சி, சிதம்பரத்தம்மாள் என்ற இரு பெண் மக்களையும் பெற்றார்கள். வ.உ.சி. மறைந்த சில ஆண்டுகளுக்குள் இவரும் மறைந்து விட்டார்.

வ.உ.சி. வேதவல்லி

வ.உ.சியின் இரண்டாவது மகள்; குடும்பத்தில் நான்காவது குழந்தை வேதவல்லி. தென் ஆப்பிரிக்க நாட்டில் வாழ்ந்து வணிகம் செய்து வந்த பெரியார் தில்லையாடி த. வேதியப்பபிள்ளை. அவர், வ.உ.சிக்கு செய்த உதவிகளுக்கு நன்றி செலுத்தும் வகையில், அவரது பெயரை இந்த மகளுக்கு வ.உ.சி. சூட்டினார். வ.உ.சி.யின் வழக்கு நடைபெறும் வேளையிலும், அதன் பின்னரும் தொடர்ந்து வ.உ.சிக்கு உதவிகளைச் செய்தவர் வேதியப்பபிள்ளை. அவரது பெயரைத் தாங்கிய வேதவல்லி அம்மையாருக்கும், வ.உ.சி. வாழ்ந்திருந்த காலத்திலேயே கொழும்பு நகரில் வணிகம் செய்து வந்த பணகுடி நிலக்கிழார் அனவரதம்பிள்ளை என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது.இவருக்கு இராமையா, சிதம்பரம் என்ற இரு புதல்வர்கள்; வ.உ.சி. மறைந்த சிறிது காலத்திற்குள் வேதவல்லி அம்மையாரும் மறைந்து விட்டார். இவரின் புதல்வரான சிதம்பரம் தற்போது பாளையங்கோட்டையில் N.G.O. காலனியில் வசித்து வருகிறார்.

வ.உ.சி. ஆனந்தவல்லி

வ.உ.சி.யின் உயிலில் திருமணம் நடைபெறவேண்டிய நிலையில் குறிப்பிடும் ஆனந்தவல்லி அம்மையார், வ.உ.சி.யின் ஐந்தாவது பிள்ளை.வ.உ.சி.யின் மறைவிற்குப் பின்னரே இவருக்குத் திருமணம் நடைபெற்றது. வ.உ.சி. பிறந்த ஒட்டப்பிடாரத்தைச் சேர்ந்த வள்ளி நாயகம்பிள்ளை அரசு ஊழியராக இருந்தவர்; அந்த வேலையிலிருந்து பின்னர் விலகினார்; வாணிபம் செய்தார்; பெருத்த நஷ்டத்திற்கு ஆளானார். பின் நெய்வேலியில் பெயருக்கு சாதாரண வேலை (கேண்டீன் மேனேஜர்) பார்த்து வந்தார். வ.உ.சி. ஆனந்தவல்லியின் கணவர் ஒட்டப்பிடாரம் வள்ளிநாயகம் பிள்ளை ஆவார். இவருக்கு முத்தையா என்ற மகனும், சேதுலெக்ஷ்மி என்ற மகளும் பிறந்தனர். மகளின் கணவரான நெ. சூரிய நாராயணன் தூத்துக்குடி ஹார்வி ஆலையில் குறுக்கெழுத்தாளராகப் பணிபுரிந்தவர் (இந்த ஆலையில்தான் வ.உ.சி. 1905-களில் தனது முதல் வேலை நிறுத்தப் போரைத் துவக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.)

வ.உ.சி. மரகதவல்லி

மதுரையில் ஹார்வி ஆலையில் துணைத் தலைமைக் கணக்கராகப்

பணியாற்றிய டி.எம். சுப்பிரமணிய பிள்ளை முதல் மனைவி மறைந்த நிலையில் இருந்தார். அவருக்கு இரண்டாவதாக வாழ்க்கைத் துணைவியாக விளங்கிய மங்கை நல்லாள் மரகதவல்லி. வ.உ.சி. தனது உயிலில் இரண்டாவது குறிப்பிடும் சௌபாக்கியவதி இவர் தான்; வ.உ.சி. மறைந்ததற்குப் பின்னரே இவருக்கும் திருமணம் நடைபெற்றது. சிதம்பரம், மீனாட்சிசுந்தரம், மனகாவலப்பெருமாள் என்ற மூன்று ஆண்மக்களைப் பெற்ற இந்த அம்மையார் இளவயதிலேயே மறைந்து விட்டார்.

வ.உ.சி. சுப்பிரமணியம்

'இந்திய சுதந்திரப் போரில் தீவிரவாதம்; மணியாச்சி கொலை' எனும் எனது எம்ஃபில் ஆய்வேட்டுப் பணிக்கான கள ஆய்வின்போது சென்னையில் 30-7-1991-இல் திரு. வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்களை நேரில் சந்தித்தேன்.வ.உ.சி. தேசத்தின் சுதந்திரத்திற்காகச் சிறை சென்று கோவைச் சிறையில் வாடியபோது, அவரைச் சிறையில் சென்று சந்திக்கவும், உதவிகள் புரிந்திடவும், நீதிமன்றத்தில் வாதாடவும் செய்தவர் கோவைச் சைவப் பெரியார் சி.கே. சுப்பிரமணிய முதலியார். அந்த நன்றியின் அடையாளமாக அவரது பெயரை வ.உ.சி. தனது ஏழாவது பிள்ளைக்குச் சூட்டினார். அவரே வ.உ.சி. சுப்பிரமணியம் ஆவார்.

இவர் எழுத்துத்துறையில் மிகுந்த ஆர்வங்கொண்டவர். தென்காசி டி.எஸ்.சொக்கலிங்கம் அவர்கள் நடத்திய 'தினசரி' இதழிலும், ஆம்பூர் ஏ.என். சிவராமன் ஆசிரியராகப் பணியாற்றிய 'தினமணி' இதழிலும் அதிக காலம் பணியாற்றியவர். வ.உ.சி.யின் 'வி.ஓ.சி. கண்ட பாரதி' 'சுயசரிதை' ஆகிய நூல்கள் பதிப்பித்தவர். 1942இல் நேதாஜியின் சுதந்திர இயக்கத்தில் கலந்து கொண்டு நாட்டிற்காகச் சிறை சென்றவர். அமெரிக்க அரசாங்கத் தகவல் நிலையத்தில் பத்திரிகைப் பணித் தமிழ்ப்பிரிவுத் தலைவராக இருந்தவர். இவருக்கு நான்கு புதல்விகளும், இரு புதல்வர்களும் இருக்கிறார்கள். பழகுதற்கும், போற்றுதலுக்குமுரிய பண்பினைப் பெற்ற வ.உ.சி. சுப்பிரமணியம் அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மறைந்தார்கள்.

வ.உ.சி. வாலேஸ்வரன்

வ.உ.சி.யின் கடைசிப்பிள்ளை இவர். தமிழக அரசில் தொழிலாளர் நலத்துறையில் பணியாற்றியவர். தற்போது பணிஓய்வு பெற்று 13 கிருஷ்ணாராவ் 2-வது தெரு, திண்டுகல்லில் வாழ்ந்து வருகிறார். அவர்களுடன் அடிக்கடி தொலைபேசியில் பேசிடவும், நேரில் சந்தித்திடவும், அவர்களைக் கொண்டு

வ.உ.சி.யின் நூலினை வெளியிடவும் ஆகிய பாக்கியங்களைப் பெற்றது அடியேனுக்கு இறைவன் வழங்கிய அதிர்ஷ்டமே.

வ.உ.சி. அவர்களுக்குத் தண்டனை வழங்கி, பின்பு நண்பராகி, சென்னை உயர்நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக விளங்கிய வெள்ளையர் ஜஸ்டிஸ் வாலேஸ். வ.உ.சி. சிறையிலிருந்து விடுதலை பெற்றதும் மீண்டும் வழக்கறிஞராகப் பணியாற்றிட 'ஸன்னத்' என்று சொல்லப்படும் அத்தாட்சி முத்திரையைப் பெற்றுத் தந்தவர் இந்த ஆங்கிலேயப் பெருமகன்.

'மாற்றார் பெயரை மகனுக்கு இட்டு' நன்றி பாராட்டும் தமிழ்ப்பண்பு வழியில் தனது கடைசி மகனுக்கு வாலேஸ்வரன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தவர் வ.உ.சி. வாலேஸ்வரன் அவர்களுக்கு சிதம்பரம், செல்வராமன் என்ற இரு புதல்வரும், மரகத மீனாட்சி என்ற புதல்வியரும் நலமுடன் வாழ்ந்து வருகின்றனர்.

வ.உ.சி.யின் உயில்

தூத்துக்குடியிலிருக்கும் மகாஸ்ரீஅசெ.சு. கந்தசுவாமி ரெட்டியார் அவர்களுக்கு தூத்துக்குடியிலிருக்கும் வ.உ. சிதம்பரம்பிள்ளை எழுதிக் கொடுத்த உயில் சாசன நிருபம்.

அன்பார்ந்த ஐயா, நமஸ்காரம். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் கடவுளையும் தங்களையொத்த உண்மை தேசாபிமானிகள் சிலரையும் தவிர இவ்வுலகத்தில் வேறு தஞ்சம் ஒருவரிருக்கிறதாக எனக்குத் தெரியவில்லை. நான், இனிமேல் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்று திடமாக நினைக்க வழி இல்லை. எனது குடும்ப நிலைமையையும் தாங்கள் முன்னின்று என் குடும்பத்திற்கு செய்ய வேண்டிய காரியங்களையும் இதன் கீழே தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் கீழ்வரும் காரியங்களை செய்து முடித்துக் கொடுத்து என் குடும்பத்தை காப்பாற்றியருளும் படியாக தங்களை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து கேட்டுக்கொள்கிறேன்.

எனது சொத்துக்கள்

எனக்கும் எனது மூத்தமகன் ஆறுமுகம் பிள்ளைக்கும் பாகவிஸ்திரமாகி பல வருஷங்களாகின்றன. அந்த தஸ்தாவேஜு என் மனைவியிடமிருக்கின்றது.

பம்பாய் எம்பெயர் ஆப் இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும், ஓரியண்டல் லைவ் அஷ்யூரன்ஸ் கம்பெனியில்

ரூபாய் ஆயிரத்துக்கும் எனது ஆயுளை இன்ஸ்யூரன்ஸ் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐநூறுக்கு மேல் எனக்கு இலாபம் (Profits) கிடைக்கக் கூடும். ஆனால் நான் ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐநூறு கடன் வாங்கி இருக்கிறேன். கடனுக்கும் இலாபத்திற்கும் அனேகமாக சரியாய் போகும். இரண்டு கம்பெனிகளுக்கும் கடைசி பிரிமியமும் (Premium) வட்டியும் கட்டப்படவில்லை. அது கட்டப்படவேண்டும். ஷை இரண்டு இன்ஸ்யூரன்ஸ் தொகையையும் பல வருஷங்களுக்கு முன்னே என் மனைவி பேருக்கு டிரேன்ஸ்பர் செய்து வைத்திருக்கிறேன். ஷை இரண்டு இன்ஸ்யூரன்ஸ் தொகைகள் தவிர என் பாகத்திற்கு ஓட்டப்பிடாரத்து எனது பெரிய புஞ்சையில் இரண்டு சங்கிலி நிலமும் பதினாறு மரக்கால் நஞ்சையும் அதன் பக்கத்தில் கிணற்றுத் தோட்டம் என்ற ஒரு நிலமும் இருக்கின்றன. இது தவிர ஓட்டப்பிடாரத்தில் கீழ்க்காட்டில் $1\frac{3}{4}$ சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்று $\frac{3}{4}$ சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்றும், இருக்கின்றன. என் மக்களால் அவ்வளவு தூரத்திலுள்ள அந்த இரண்டு புஞ்சைகளையும் பயிர் செய்து கொள்ள முடியாது. அவற்றை ரூபாய் ஐநூறுக்கு தங்கள் பேருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஓட்டப்பிடாரத்தில் ஒரு பழைய காரைக்கட்டு மட்டப்பா வீடு ஒன்று இருக்கிறது. அதன் மச்சுக் கட்டைகளெல்லாம் இற்றுப் போய் ஆபத்தான நிலைமையில் இருக்கின்றன. ஷை மச்சைப் பிரித்தெடுத்து சுவர்களை இன்னும் மூன்றடி உயர்த்தி தேக்கு மரக்கட்டை போட்டும் மேல் பக்கமுள்ள இரண்டு சன்னல்களுக்கு நேராக கீழ் பக்கம் இரண்டு சன்னல்கள் வைத்தும் அரைவீட்டை எடுத்து விட்டும் தாங்கள் புதுப்பித்து கொடுக்க வேண்டும். அப்படி செய்த பின் அவ்வீட்டில் என் மனைவி மக்கள் குடியிருந்து வரலாம். ஆத்தூர் பிரமு அம்மாள் ரூபாய் எழுநூற்றைம்பதுக்கு என் மனைவி பேருக்கு ஒரு அடமான தஸ்தாவேஜ் எழுதிக் கொடுத்திருக்கிறாள். அடமான சொத்துக்கள் தங்களுக்கு முந்திய அடமானம். அடமான சொத்துக்கள் சுமார் ரூபாய் இரண்டாயிரத்துக்கு விலை போகும். என் மனைவி அடமான தஸ்தாவேஜை தங்கள் பேருக்கு மேடோபர் வாங்கிக் கொள்க. அதற்கு வசூலாகும் தொகையையும் மேலே கண்ட என் புஞ்சைக்கிரயம் ரூபாய் ஐநூறும் அவசியமானால் என் மைத்துனன்மார் குடும்பத்திலிருந்து என் குடும்பத்திற்கு கிடைக்கக்கூடிய ரூபாய் 1500-ம் நான் தங்களிடம் பற்றி வருகிற தொகைக்கு ஈடு செய்து

தூத்துக்குடியிலிருக்கும் மகாராஜ ஸ்ரீ செ. சுந்தரசுவாமி ஐயரவர்களுக்குத் தூத்துக்குடியிலிருக்கும் வ.உ. சிதம்பரம்பிள்ளை எழுதிக்கொடுத்த உயில் சாசன நிருபம் -

அன்பார்ந்த ஐயா,

நமஸ்காரம். எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் கடவுளையும் தங்களையொத்த உண்மை தேசாபிமானிகளையும் தவிர இவ்வுலகத்தில் வேறு துணை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் இனிமேல் அதிக காலம் ஜீவித்திருப்பேனென்று திடமாக நினைக்க வழியில்லை. எனது குடும்ப நிலைமையையும் தாங்கள் முன்னின்று என் குடும்பத்திற்கு செய்ய வேண்டிய காரியங்களையும் இதன் கீழ்க் குறிப்பிட்டுத் தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் கீழ்வரும் காரியங்களை செய்து முடித்துக் கொடுத்து என் குடும்பத்தைக் காப்பாற்றியருளும்படியாக தங்களை சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து கேட்டுக் கொள்கிறேன்.

<u>எனது சொத்துகள்</u>

எனக்கும் எனது மூத்த மகன் ஆறுமுகம் பிள்ளைக்கும் பாகவிஸ்தீர்ணம் பல வழக்குகளாகின்றன. அதன் தஸ்தாவேஜ் என் மனைவியிடமிருக்கின்றது.

பம்பாய் எம்பயர் ஆப் இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும் ஓரியண்டல் லைவ் அஷ்யூரன்ஸ் கம்பெனியில் ரூபாய் ஆயிரத்துக்கும் எனது ஆயுளை இன்ஷ்யூர் செய்திருக்கிறேன். ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐந்நூறுக்கு மேல் எனக்கு லாபம் (Profits) கிடைக்கக் கூடும். ஆனால் நான் ஒவ்வொரு கம்பெனியிலும் ரூபாய் ஐந்நூறு கடன் வாங்கியிருக்கிறேன். கடனுக்கும் லாபத்திற்கும் அனேகமாக சரியாய் போகும். இரண்டு கம்பெனிகளுக்கும் கடைசி பிரிமியமும் (Premium) வட்டியும் கட்டப்படவில்லை. அது கட்டப்படவேண்டும். மேற்படி இன்ஷ்யூரன்ஸ் தொகைகளையும் பல வருஷங்களுக்கு முன்னே என் மனைவி பேருக்கு டிரேன்ஸ்பர் செய்து வைத்திருக்கிறேன். மேற்படி இன்ஷ்யூரன்ஸ் தொகைகள் தவிர என் பாகத்திற்கு ஒட்டப்பிடாரத்தில் எனது பெரிய புஞ்சையான இரண்டு சங்கிலி நிலமும் பதினாறு மரக்கால் நஞ்சையும் அதன் பக்கத்தில் கிணற்றுத் தோட்டம் என்ற ஒரு நிலமும் இருக்கின்றன. இது தவிர ஒட்டப்பிடாரத்தில் மேற்படி நபர் 1/2 சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்றும் 1/4 சங்கிலி கரிசல் புஞ்சை ஒன்றும் இருக்கின்றன. என் மக்களால் அவ்வாறு தூரத்திற்

வ.உ. சிதம்பரம்பிள்ளை

(3)

அந்த இரண்டு புஞ்சைகளையும் பயிர் செய்து கொள்ள முடியாது. அவை [illegible] ரூபாய் இருநூறுக்கு தங்கள் பேருக்கு கிரயம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

ஒட்டப்பிடாரத்தில் எனது பழைய [illegible] கட்டு மட்டப்பா வீடு ஒன்று இருக்கிறது. அதை மக்கள் [illegible] இருந்து போய் அதைத் தன் நிலைமையில் இருக்கிறது. [illegible] பிரித்தெடுத்து [illegible] உயரத்தி [illegible] மரக்கட்டை போட்டு [illegible] பக்கங்களில் இரண்டு [illegible] பக்கம் இரண்டு ஜன்னல்கள் வைத்தும் [illegible] தாங்கள் புதுப்பித்துக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்த பின் அவ்வீட்டில் என் மனைவி மக்கள் குடியிருந்து [illegible] ஆத்தூர் [illegible] அம்மாள் ரூபாய் [illegible] ஒத்தி அடமான தஸ்தாவேஜ் எழுதிக் கொடுத்திருக்கிறேன். அடமான சொத்துக்களை தவிர [illegible] அடமானம். அடமான [illegible] ரூபாய் இரண்டாயிரத்துக்கு வாங்க போகும். [illegible] அடமான தஸ்தாவேஜு தங்கள் பேருக்கு [illegible] அதற்கு வசூலாகும் தொகையும் [illegible] கிரயம் ரூபாய் [illegible] அவசியமானால் [illegible] திலிருந்து என் குடும்பத்திற்கு கிடைக்கக் கூடிய ரூபாய் 1500 [illegible] தங்களிடம் பற்றி வருகிற தொகைக்கு [illegible] விற்று [illegible] போகக்கூடிய [illegible] னிடமிருக்கின்றன. அவற்றை விற்க வேண்டும்.

<u>எனது கடன்கள்</u>

தூத்துக்குடி [illegible] ரூபாய் (135)

தூத்துக்குடி [illegible]

[illegible] ரூபாய் (60)

[illegible]

[illegible] ரூபாய் (30) [illegible] ரூபாய் (60)

[illegible]

[illegible] 16 [illegible] ரூபாய் 50 [illegible] (8)

எனது தம்பி மீனாட்சி சுந்தரம் [illegible] சம்பளம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது செய்ய வேண்டிய அவசர காரியம் ஒன்று [illegible] என் மக்களில் மூத்தவனாகிய [illegible] அம்மாளுக்கு [illegible] செய்து வைக்க வேண்டும். [illegible] கிடையாததால் [illegible] இப்போது ரூபாய் [illegible] அவசியம்.

வ.உ. சிதம்பரம்பிள்ளை

(3)

...களுக்கு இருக்கின்றன. இன்னும் இப்போது [illegible] போடவேண்டும். கலியாணப் பந்தல் [illegible] செய்யவும் வேண்டும். அவற்றுக்கு [illegible] 1000 ரூபாய் போகும். [illegible] கலியாணத்தை இன்னும் [illegible] லாம். அவருக்கும் அவரிடமிருக்கிற நகைகளை சேர்த்து [illegible] ஆயிரத்துக்கு நகை போடவேண்டும். [illegible] செய்ய வேண்டும். அவற்றிற்கு [illegible] பணம் ரூபாய் 1000ம் ரூபாய் போகும். [illegible] தாங்களே வாங்கி வைத்திருந்து [illegible] கொடுத்து வரவேண்டும். [illegible] மக்களுடைய [illegible] யாதொரு [illegible] நான் எழுதுகிறேன். [illegible] எனது [illegible] விடப்பட்டுள்ளன.

[illegible]

[illegible]

இப்பொழுது [illegible] வாங்க வேண்டும். [illegible] ஒன்று [illegible] மாதத்திற்கு [illegible] பதிவு [illegible] வேண்டும். [illegible] சம்மதிக்காவிட்டால் [illegible] வேண்டும். என் மைத்துனர் [illegible] வாங்கி [illegible] தொகையை [illegible] சொத்துக்கள் [illegible] கொடுக்க வேண்டும். [illegible] செய்து கொள்ள வேண்டும். [illegible] அவர்களுடைய [illegible] சமமாக பகிர்ந்து [illegible]

[illegible]

[illegible] வேண்டும். ஆனால் எனது பெரிய மைத்துனர் [illegible] அவன் [illegible] பாகம் சொத்துக்களிலிருந்து [illegible] வேண்டும். [illegible] வீடு [illegible] வேண்டும். [illegible] 19 [illegible] வேண்டியது. [illegible] கொடுத்துவிட [illegible] கணக்கு வைத்திருந்து அவன் [illegible] அவனிடமிருந்து தொகை [illegible] வேண்டும். [illegible]

[illegible]

15000 ரூபாய் என் மைத்துனர் [illegible] வட்டியாக [illegible] பிரயோஜனமாக [illegible] வேண்டும். [illegible] தொகைக்கும் [illegible] பற்று [illegible] தயார் செய்து [illegible] கொடுக்கும்படி [illegible] செய்க.

இதன் பிரதி ஒன்று என் மனைவியிடமும் மற்றொன்று என் மைத்துனர் [illegible] கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேற்கண்ட காரியங்களெல்லாம் தாங்கள் இனிது செய்து முடித்து அருள்புரிக.

தூத்துக்குடி வ. உ. சிதம்பரம்பிள்ளை
[illegible]-10-36

கொள்க. இப்பொழுதும் ரூபாய் இருநூறு விலை போகக் கூடிய சட்டப் புஸ்தகங்கள் என்னிடமிருக்கின்றன. அவற்றை விற்க வேண்டும்.

எனது கடன்கள்

தூத்துக்குடி நேஷனல் பேங்க் ஆப் இந்தியா லிமிடெட்டுக்கு ஐந்து மாத வீட்டு வாடகை ரூபாய் (135).

தூத்துக்குடி சரோஜினி ஸ்டோர்ஸ் ஐவுளி பாக்கி சுமார் ரூபாய் (30)

வன்னியஞ்செட்டியார் எண்ணெய் கடைக்கு சுமார் ரூபாய் (30) சில்லரைக் கடன் ரூபாய் (60).

இன்ஸ்பெக்டர் பிள்ளைக்கு ரூ. 20 சோமநாத்துக்கு ரூ. 16. வேதவல்லிக்கு ரூபாய் 50. ஆக மொத்தம் ரூபாய் (86).

எனது தம்பி மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு சாப்பாடு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்போது செய்ய வேண்டிய அவசரக் காரியம் ருதுவாயிருக்கிற என் மக்களிருவரில் மூத்தவளாகிய சௌபாக்கியவதி ஆனந்தவல்லி அம்மாளுக்கு விரைவில் கலியாணம் செய்து வைக்க வேண்டும். சரியான மாப்பிள்ளை கிடையாததால் தாமதம். இப்போது சுமார் ரூபாய் ஐநூறுக்கு அவளிடத்தில் நகைகள் இருக்கின்றன. இன்னும் ரூபாய் ஐநூறுக்கு அவளுக்கு நகைபோட வேண்டும். கலியாணப் பந்தல் செலவு ஒரு வருஷத்து சீர் சீராட்டு செய்யவும் வேண்டும். அவற்றிற்கு ஒரு கம்பெனி இன்ஸ்யூரன்ஸ் பணம் 1000-மும் சரியாய் போகும். சௌபாக்கியவதி மரகதவல்லி அம்மாள் கலியாணத்தை இன்னும் இரண்டு வருஷம் கழித்து நடாத்தி வைக்கலாம். அவளுக்கும் அவளிடமிருக்கிற நகைகளை சேர்த்து ரூபாய் ஆயிரத்துக்கு நகை போடவேண்டும். ஒரு வருஷத்து சீர் சீராட்டும் செய்ய வேண்டும். அவற்றிற்கு மற்றொரு கம்பெனியின் இன்ஸ்யூரன்ஸ் பணம் ரூபாய் 1000-மும் சரியாய் போகும். என் குடும்பத்திற்கு வரக் கூடிய தொகைகள் எல்லாம் தாங்களே வாங்கி வைத்திருந்து கோவாப்பிரேட்டிவ் சொஸைட்டியில் கொடுக்கிற கரண் டிபாஸிட் வட்டி போட்டு கொடுத்து வர வேண்டும். இந்த நிலைமையில் என் மனைவி மக்களுடைய அன்னவஸ்திர கல்வி செலவுகளுக்கு யாதொரு ஐவேசுமில்லை. அதற்கு ஒரு நிதியுண்டு பண்ண நான் முயலுகிறேன். என் நிலங்களில் நஞ்சை தவிர பெரிய புஞ்சை சங்கிலி இரண்டும் தோட்டமும் என் தங்கை அன்னவஸ்திரத்திற்காக விடப்பட்டுள்ளன.

திருச்செந்தூர் மைத்துனன்மார் காரியம்

வீரபாண்டியன் பட்டணம் பூபாலராயன் இடமிருந்து ரொக்கமே வாங்க வேண்டும். சொத்து ஒன்றும் வாங்கக் கூடாது. திருச்செந்தூர் உண்டியல் கடை சரசிணை ஐயர் ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மாத்திரம் பெற்றுக் கொள்ளச் சம்மதித்தால் அவரிடமிருந்து என் மைத்துனன்மார் அடமானத்தை விடுதலை செய்து தஸ்தாவேஜ் எழுதி ரிஜிஸ்டர் செய்து வாங்க வேண்டும். அவர் ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறுக்கு சம்மதிக்காவிட்டால் அவர் நம்பர் போட்டுக் கொள்ளும்படி விட்டு விடவேண்டும். என் மைத்துனன்மார் சகோதரியாகிய சௌபாக்கியவதி ஆறுமுகத்தம்மாளுக்கு நகைப் பாவத்து வகைக்கு கொடுக்க வேண்டிய ரூபாய் ஐந்நூறு அவள் இஷ்டப்படி ரொக்கமாகவோ, நகையாகவோ கொடுத்து ரசீது வாங்கிக் கொள்ள வேண்டியது. என் மைத்துனன்மார்கள் பெரும் செலவாளிகளாய் இருக்கிறபடியால் பாக்கித் தொகையில் யானையப்ப பிள்ளை சத்திரத்துப் பக்கத்தில் மரக்கால் ஒன்றுக்கு ரூபாய் நூறு விலைக்கு நல்ல நஞ்சை கிடைக்கக்கூடியதாக இருக்கிறது. அதில் மூன்று கோட்டை விரப்பாடு தங்கள் பேருக்கு கிரயத்திற்கு வாங்கி அவற்றையும் பாக்கி தொகையையும் என் மைத்துனன் மூவரும் மூன்று பங்கு வைத்து தங்கள் மனைவி மக்களுடன் அவர்கள் யாதொரு வில்லங்கத்திற்கும் உள்படுத்தாமல் அனுபவித்துக் கொள்ளும்படிக்கும் அவர்கள் மக்கள் மெஷார்(மேஜர்)யடைந்த பின் அவர்கள் சர்வ சுதந்திர பாத்தியமாக அனுபவித்துக் கொள்ளும்படி தாங்கள் அவர்களுக்கு நன்கொடை தஸ்தாவேஜ் எழுதி ரிஜிஸ்தர் செய்து கொடுக்க வேண்டும். என் பெரிய மைத்துனன் சுப்பிரமணிய பிள்ளை ஒருக்கால் கலியாணம் செய்து கொள்ள விரும்பிவில்லையானால் அவன் பாகச் சொத்துக்களை அவனுடைய சகோதரர் இருவர்களுக்கும் சமமாக பகிர்ந்து நன்கொடை தஸ்தாவேஜில் எழுதி வைக்க வேண்டும். ஆனால் எனது பெரிய மைத்துனன் தனது வீட்டை வில்லங்கம் செய்யாத காலம் வரையில் அவன் அன்னவஸ்திர செலவிற்கு அவன் பாகச் சொத்துக்களிலிருந்து மற்றைய இருவரும் நபர் ஒன்றுக்கு ரூபாய் ஐந்து வீதம் ரூபாய் பத்து மாதம் தோறும் கொடுத்து விடவேண்டும். திருச்செந்தூர் வீடுகளில் தெற்கு வீடு சுப்பிரமணியத்துக்கும் வடக்கு வீடு வெங்கிடாசலத்திற்கும் சேரவேண்டும். வடக்கு வீட்டிற்கு எதிரேயுள்ள காலிமனைதான் மைனர் குஞ்சரத்திற்கு சேரக்கூடியதாக இருக்கிறது. வடக்கு வீட்டையும் தெற்கு

வீட்டையும் கிரயம் போட்டு தெற்கு வீட்டிற்கு போகும் கிரயத்தில் அதிகப்படும் தொகையை வெங்கிடாசலத்திற்கும் சுப்பிரமணியன் சொத்துக்களிலிருந்து கொடுக்க வேண்டும். குஞ்சரம் வீடு கட்டுவதற்கு ரூபாய் இவ்வளவு என்று இப்பொழுதே தீர்மானித்து மற்றைய இருவரும் அவருக்கு செலுத்திவிட வேண்டும். 19 பனை புஞ்சையையும் சமமாக பங்கிட்டு மூன்று பேருக்கும் கொடுத்து விட வேண்டியது. மைனர் குஞ்சரத்திற்கு கார்டியனாக வெங்கிடாசலத்தையும் ஷியார் அத்தான் சண்முகம் பிள்ளையும் நியமித்து அவனுடைய வரவு செலவுகளுக்கு சரியான கணக்கு வைத்திருந்து அவன் மெஷாரடைந்தபின் சொத்தையும் கணக்கையும் அவனிடம் ஒப்புக்கும்படியாக நன்கொடை தஸ்தாவேஜில் எழுதவேண்டும். பூபாலராயரிடமிருந்து தொகை பூராவும் வசூலாகிவிட்டால் அவருக்கு தாங்களும், நான்..........(இந்த இடத்தில் ஒரு வரி சிதிலமடைந்துள்ளது) ரூபாய் 1500-ம் நான் என் மைத்துனன்மார் குடும்பத்திற்கு சென்ற பத்து வருஷமாக பாடுபட்டு வந்ததற்கு பிரதிபிரயோஜனமாக என் குடும்பத்தாருக்கு கொடுக்க வேண்டும். பூபாலராயரிடமிருந்து வரவு வந்திருக்கிற தொகைக்கும் பற்றாயிருக்கிற தொகைக்கும் பேரேட்டுபடி ஒரு நகல் தயார் செய்வித்து கூடிய விரைவில் எனக்கு கொடுக்கும்படி உத்தரவு செய்க.

இதன் பிரதி ஒன்று என் மனைவியிடமும் மற்றொன்று என் மைத்துனன் வெங்கிடாசலமிடமும் கொடுக்கப்பட்டுள்ளன.

எல்லாம் வல்ல இறைவன் அருளால் மேற்கண்ட காரியங்கள் எல்லாம் தாங்கள் இனிது செய்து முடித்து அருள்புரிக.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரம்பிள்ளை

26-10-36

உயிலைப் படித்ததற்குப் பின்னால்



வரலாற்று ஆசிரியர் செ. திவான் எழுதிய ''இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.'' நூல் வெளியீட்டு விழாவின் போது நூலாசிரியருக்கு வ.உ.சி.யின் திருப்புதல்வர் வ.உ.சி. வாலேஸ்வரன் பொன்னாடை அணிவித்த போது உடன் சாகித்ய அகாதெமி விருது பெற்ற எழுத்தாளர் தி.க.சி. வ.உ.சி. பேரர் சிதம்பரம், திரு. ஐ. சாமுவேல்



திருமணப் பத்திரிகை

ஸ்ரீ அகண்டபரிபூரண சச்சிதானந்த ஸ்ரீ கன்னிபதத்தின் திருவருளால்,

எனது ஜேஷ்ட குமாரர் தூத்துக்குடி டிஸ்டிரிக்டு முன்சிபு கோர்ட்டு பிளீடர் சிரஞ்சீவி,

☞ கவிராஜர் சிதம்பரம்பிள்ளைக்கு

எனது மைத்துனர் ஆழ்வார்திருநகரி மாஜிஸ்திரேட் மகா-ள-ள-ஸ்ரீ சி. வ. பாப்புபிள்ளை என்ற ஞானதேசிகம்பிள்ளையவர்கள் புத்திரி சௌபாக்கியவதி,

☞ மகராசி மீனாக்ஷியம்மாளை

விவாகஞ்செய்யவிச்சயித்து நிகழும் பிலவ ஹூ சிம்மாவி ௨௰௪௨ (8-9-1901) ஆதித்தவாரமும் புனர்பூச நக்ஷத்திர முங்கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை ௯-க்குமேல் ௧௰-க்குள்ளாக கன்னியாலக்கனத்தில் தூத்துக்குடி மேலூர் சிவன்கோவில் தெருவில் எனது வீட்டில் நடைபெறும் திருமாங்கல்யதாரண முகூர்த்தத்திற்கும் மறுநாள் நடக்கிற பட்டணப்பிரவேச முதலான சகல வைபவங்களுக்கும் தாங்கள் பந்துமித்திரர்கள் சகிதம் வந்திருக்க பிரார்த்திக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்.

ஆவணிமீ ௨௰௨ } வ. உலகநாதபிள்ளை,
தூத்துக்குடி. } வக்கீல், ஒட்டப்பிடாரம்.

அவ்வண்ணம் நானும் கேட்டுக்கொள்ளுகிறேன்.
சி. வ. பா. ஞானதேசிகம்பிள்ளை,
ஆழ்வார்திருநகரி.

With the best compliments of
V. O. Chidambaram Pillai, Pleader, Tuticorin.

வ.உ.சி.யின் திருமண பத்திரிகை.

தினமணி

17-11-1936 செவ்வாய்க்கிழமை

ஸ்ரீ. வ.உ. சிதம்பரம் பிள்ளை தேக நிலை
தண்ணீர் கூட இறங்கவில்லை
பாரதி கீதங்களை கேட்க ஆவல்

(நமது நிருபர்)

தூத்துக்குடி, நவ. 16— தூத்துக்குடி தேச பக்தர் ஸ்ரீ வ.உ. சிதம்பரம் பிள்ளை தேக நிலை வர வர மோசமாகிக் கொண்டே வருகிறது. நேற்று முதல் ஒரு கரண்டி தண்ணீர் கூட இறங்கவில்லை. பேசவும் முடியவில்லை. ஆனால் கை ஜாடை காட்டுகிறார். சென்ற 4 தினங்களுக்கு முன் பாரதியாரின் சுதந்திர உணர்ச்சி ததும்பிய கீதங்களைக் கேட்க பிரியப்படுவதாகக் கூறினார். உடனே தூத்துக்குடி காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ பெ. கந்தசாமி பிள்ளை சில தொண்டர்களை அழைத்து வந்து ஸ்ரீ பிள்ளை முன்னால் நின்று பாடும்படி செய்தார். ஸ்ரீ. பிள்ளை பாடல்களை காது குளிர கேட்டு வந்தனங் கூறுகையில் "என்னை சிறையிலடைத்து துன்புறுத்தியவர்கள் முன்னால் நான் சுதந்திர இந்தியாவில் வாழ முடியவில்லையே" என்று கூறினார்.

தூத்துக்குடி வக்கீல் சங்கத்தார் சென்ற வியாழக்கிழமை ரூ.75 கொண்ட ஓர் பண முடிப்பை ஸ்ரீ. பிள்ளையவர்களுக்கு தீபாவளிப் பரிசாக அளித்தார்கள்.

பணப் பையை அளிக்கையில் ஸ்ரீ. பால் நாடார், ஸ்ரீ. பிள்ளையவர்களின் தேச சேவையையும் வக்கீல் தொழிலின் சாமர்த்தியத்தையும் வியந்து பேசினார். ஸ்ரீ.பிள்ளையவர்கள் வாய் திறந்து பேச சக்தியற்றிருந்ததினால் சந்தோஷ முகத்துடன் பணப் பையை பெற்றுக் கொண்டார்.

வந்திருந்த வக்கீல்களுக்கு கற்கண்டு, வெற்றிலை பாக்கு வழங்கிய பின் கூட்டம் கலைந்தது.

வ.உ.சி.க்கும், அவரது மூத்தமகன் வ.உ.சி. ஆறுமுகத்திற்கும் நடைபெற்ற பாகப்பிரிவினை நகல் கிடைத்தால் மேலும் சில விவரங்கள் கிடைக்கக்கூடும்.

வீடு புதுப்பிக்கப்படவில்லை

வ.உ.சி. தனது உயிலில் குறிப்பிட்டிருக்கும் ஒட்டப்பிடாரம் இல்லம் வ.உ.சி. குடும்பத்தினரால் புதுப்பிக்கப்படவில்லை. பின்னால் தமிழ்நாடு அரசு அதை விலைக்கு வாங்கி அதனை வ.உ.சி. நினைவிடமாக அறிவித்தது. அப்போது அந்தக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டது.அங்கு வ.உ.சி. நினைவகமும், நூலகமும் இப்போது இயங்கி வருகிறது.

தம்பி மீனாட்சிசுந்தரம்

வ.உ.சி.யின் உடன்பிறந்த தம்பி மீனாட்சி சுந்தரம். ராஜநிந்தனை வழக்கில் வ.உ.சிக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பெற்றதைக் கேட்டு அதிர்ச்சியுற்று மனநிலை பாதிக்கப்பட்டார்.. இவர் எங்காவது கடையில் சாப்பிட்டு விட்டுச் சென்றால், அதற்குரிய தொகையினை தன்னிடம் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று வ.உ.சி. அப்போது அறிவித்திருந்தார். தனது உயிலிலும் தனது தம்பிக்கு சாப்பாடு கிடைப்பதற்குரிய ஏற்பாடுகளை வ.உ.சி. செய்திருந்தார். வ.உ.சி. மறைந்த ஏழு ஆண்டுகளுக்குள் 1943-இல் மீனாட்சி சுந்தரம் காலமானார்.

வ.உ.சி.யின் சட்டப்புத்தகங்கள்

வ.உ.சி. உயிலில் குறிப்பிடும் சட்டப்புத்தகங்கள் என்ன ஆயிற்று என்ற விவரம் தெரியவில்லை.

சீர்திருத்தத் திருமணம்

1935-இல் தூத்துக்குடி மட்டக்கடை பகுதியிலுள்ள சின்னக்கடை சந்தில் வசித்து வந்த வசந்தா அம்மாளுக்கும், பின்னாளில் இரண்டாம் உலகப் போரின்போது இராணுவத்தில் பணியாற்றிய டாக்டர் சுப்பிரமணியன் என்பவருக்கும் 1935-இல் சீர்திருத்த முறைப்படி தூத்துக்குடியில் திருமணத்தை தலைமை தாங்கி நடத்தி வைத்தவர் வ.உ.சி.

1936-இல், தனது வாழ்வின் இறுதியில் தனது இரு பெண்மக்களுக்கு திருமணத்தை நடத்தி வைக்காமலே மறைந்த செய்தி கல் நெஞ்சத்தினரையும் கலங்க வைக்கும் செய்தியாக அமைந்துள்ளது.

வ.உ.சி. மீனாட்சியம்மையார்

தனது பிள்ளைகள் தூத்துக்குடியில் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்ததால், வ.உ.சி.யின் துணைவியார் மீனாட்சியம்மையார் ஒட்டப்பிடாரத்திற்குச் செல்லவில்லை. தூத்துக்குடியிலேயே தொடர்ந்து வாழ்ந்து வந்தார்.

தனது கணவர் வ.உ.சி.யின் மறைவிற்குப்பின்னர், குடும்பத்திற்குத் தூண்போல நின்று ஆண்மகன்போல உழைத்த தனது மகள் மரகதவல்லியின் மறைவால், மிகவும் பாதிக்கப்பட்டார். எத்தனையோ இடர்ப்பாடுகளையும், இன்னல்களையும், இடைஞ்சல்களையும் கல் மனத்துடன் நல் முகத்துடன் தாங்கி வாழ்ந்து வந்தார் மீனாட்சி அம்மையார்.

திருமணம்

வ.உ.சி.யின் மறைவிற்குப் பின்னர் வ.உ.சி.யின் துணைவியார் மீனாட்சியம்மையார் மிகுந்த சிரமங்களைத் தாங்கி, தனது புதல்விகள் இருவருக்கும் எளிய முறையில் திருமணத்தை நடத்தி வைத்தார்கள். மீனாட்சி அம்மையார் ஏறத்தாழ அறுபதாவது அல்லது அறுபத்தைந்தாவது வயதில் கி.பி. 1951-இல் மறைந்தார்.

என் கரங்களில் வ.உ.சி.யின் உயில் கிடைத்ததும், அதனை வாசித்து முடிந்தபோது கண்களிலிருந்து கண்ணீர் பெருகி ஓடியது; அன்றிரவு முழுவதும் தூங்கவில்லை. இன்று நாடெங்கும் வ.உ.சியின் பெயரால் எத்தனையோ காரியங்கள்...... மணிமண்டபம் இத்யாதி..... இத்யாதி. வாழும் போது அவரை இந்தச் சமூகம் கவனிக்கவில்லை; ஆதரிக்கவில்லை; கொள்கை உறுதியோடு வாழ்ந்து, இலட்சியவாதியாகத் திகழ்ந்த வ.உ.சி. தனது உயிலினை எழுதிய 23 முழு நாட்களுக்குள் (26-10-1936 - 18-11-1936) இயற்கை எய்தினார். வ.உ.சியைப் போன்ற தேசபக்தச் செம்மல்கள் பிறப்பது அரிது;

இறைவன் அருளால் இந்த நாட்டை நல்வழிக்குக் கொண்டு செல்ல முயலும் செம்மல்கள் வையகத்தை நல்வழியில் கோலோச்சிட தகுதி வாய்ந்தவர்கள் தோன்றியிருப்பின் அவர்களையும் இச்சமூகம் கவனியாது, போற்றாது விட்டு விடக்கூடாது என்பதற்காக நேற்றைய வரலாற்றினை நினைவூட்டுவதற்காக, நாளைய வரலாறு நன்கு அமைவதற்காக, நன்மைகள் வளர்வதற்காக, இதுவரை வெளிவராத வ.உ.சியின் உயிலை முதன் முறையாக நூலாக்கியுள்ளேன். இதனை எனக்கு அளித்த வ.உ.சி.யின் புதல்வர் பெரியவர் பண்பாளர் வ.உ.சி. **வாலேஸ்வரன்** அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே!

செ. திவான்.

★★★★★

சகோதரர் **செ. திவான்** அவர்களின்
இலக்கிய முயற்சிகள் தொடர்ந்து, வெற்றி பெற

நல்வாழ்த்துக்கள்



மு. சுப்புரத்னம் பி.எஸ்ஸி .பி.எல்.

மாநகர் மாவட்ட ம.தி.மு.க. செயலாளர்
மாவட்டக் கழக அலுவலகம்
2, சுப்பிரமணிய லாட்ஜ், ஹோட்டல் பிரபு மாடி,
திருநெல்வேலி ஜங்ஷன் - 627 001.
✆ : 2333342
இல்லம் : ஹெச்120, அன்பு நகர் பேஸ் 2,
திருநெல்வேலி - 627 011.
✆ : 2531709